இருக்கிறது. அந்தக் கூட்டத்திலே மையப் பொருளாக, ஒரு முக்கியமான பொருளாக, மீண்டும் தனியாக ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்கி, வேலைவாய்ப்பை அவர்களுக்கு உடனடியாக உருவாக்கித் தர வேண்டும்; அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அந்தக் கூட்டத்திலே உறுதியாக வலியுறுத்தப்படவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல், அந்தக் கூட்டத்திலே மேற்கொள்ளக்கூடிய முடிவுகளை அடுத்து, நிலம் வழங்கி வேலை கிடைக்காத அந்தக் குடும்பத்தாரினுடைய கோரிக்கைகளை உடனடியாக மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கையில் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய அறிவுரையோடும், ஆலோசனையோடும் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

6. விதி 110-ன்கீழ் அறிக்கை

நிஷா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழகத்தில் 20 மாவட்டங்களில் நிஷா புயலினால் பாதிக்கப்பட்ட நெல் பயிருக்குக் காப்பீடு செய்த 5,36,352 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக காப்பீட்டுக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூ.651.66 கோடியில் முதல்கட்டமாக மாநில அரசின் 50 சதவிகிதப் பங்கான ரூ.306.477 கோடியுடன் காப்பீட்டுக் கழகத்தின் ரூ.19.353 கோடியும் சேர்த்து ரூ.325.83 கோடி வழங்கப்பட்டது.

மத்திய அரசு, அதன் பங்குத் தொகையில் மூன்று கட்டங்களாக அளித்த தொகை ரூ.254.859 கோடியுடன், இந்திய வேளாண் பயிர் காப்பீட்டுக் கழகத்தின் ரூ.19.353 கோடியும் சேர்த்து ரூ.274.212 கோடி,

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2010 ஏப்ரல் 28

இதுவரை 17 மாவட்டங்களுக்கு முழுமையாகவும், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு 90 சதவிகிதமும் வழங்கப்பட்டது.

தற்போது மத்திய அரசு விடுவித்த எஞ்சிய தொகையான ரூ.51.618 கோடி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு உடனடியாக முழுமையாக வழங்கப்படும் என்று இந்தப் பேரவைக்கு அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அறிவிப்பு

செல்ஃபோன் இயக்கம் நிறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது cell phone - செல்லிடத் தொலைபேசியை off செய்துவிட்டு பேரவைக்குள் வரவேண்டுமென்று ஏற்கெனவே சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது. இருப்பினும், பேரவையில் சிலர் செல்லிடத் தொலைபேசியை உபயோகிப்பதாக நான் அறிகிறேன். எனவே, பேரவைக்குள் வரும் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றும் அலுவல் காரணமாக வரும் அலுவலர்களும் செல்லிடத் தொலைபேசியை off செய்துவிட்டு பேரவைக்குள் வருமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

8. நிஷா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்து அறிவித்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சருக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம், என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதிலே மீதமிருந்த தொகை தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு வழங்கப்படும் என்றும், அதற்கான நிதியையும் ஒதுக்கி, இங்கே விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்ற